# சீர்காழி நகராட்சி



**2019–ம் ஆண்டு மார்ச் மாதம் 07.03.2019 வியாழக் கிழமை காலை 11.00 மணிக்கு சீர்காழி நகராட்சி அலுவலகத்தில் நடைபெற்ற அவசரகூட்ட நடவடிக்கை.**

முன்னிலை.திருமதி.மு.அஜிதாபர்வின்.B.sc
தனி அலுவலர் (ம) ஆணையர்
சீர்காழி நகராட்சி.

| | |
|---|---|
| பொருள் எண்-1 | சீர்காழி நகராட்சி எல்லைக்குட்பட்ட 49, கைவிளாஞ்சேரி கிராமம் வார்டு “B” பிளாக் எண்.01 புல எண்.42/2, 42/3, 42/4, 48/3A,–ல் நகரளவை எண்:40/2 2.301/3 ஏக்கர் நிலத்தை சீர்காழி நகராட்சி அங்கீகரிக்கப்பட்ட முழுமை திட்டத்தில் விரிவு அபிவிருத்தி திட்ட எண்.9–ல் விவசாய பகுதியாக நிலப்பயன்பாடு இருப்பதை குடியிருப்பு பகுதியாக நிலப்பயன்பாடு திட்ட மாற்றம் செய்து, வீட்டு மனைப்பிரிவு அமைக்க உத்தேசித்து, கருத்துரு தயார் செய்து நகராட்சி ஆணையர் வழியாக நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், தஞ்சாவூர் அவர்களுக்கு கடித ந.க.எண். 2203/2003/தம2/ நாள்,16.10.2018 கடிதத்தின் வாயிலாக தெரிவிக்கப்பட்டதில்<br>மேற்படி 1) புல எண்.42/2 ல் மொத்தம் ஏ1.11 செண்டில் (0.45ஏர்ஸ்) நஞ்சைநிலம் சீர்காழி பத்திரபதிவு அலுவலக பத்திர பதிவு எண்.2542/2009 நாள்.07.10.2009–ன் படி மனுதாரர் திரு ரா.நாராயாணசாமி என்பவருக்கு சொந்தமாகவும் உள்ளது. 2) புல எண்: 42/3 ல் (0.04.0 ஏர்ஸ்) ஏ0.10 செண்ட் நிலம் சீர்காழி பத்திர பதிவு அலுவலகம் பத்திர பதிவு எண்:1966/2017-ன் படி மனுதாரர் திரு. ரா.நாராயாணசாமி என்பவருக்கு சொந்தமானதாக உள்ளது 3) புல எண். 42/4 ல் மொத்தம் 0.661/3 செண்ட் (0.27.0 ஏர்ஸ்) நிலம் சீர்காழி பத்திர பதிவு அலுவலக பத்திர பதிவு எண்.2804/2009 நாள்.04.11.2009–ன் படி மனுதாரர் திரு. ரா.நாராயாணசாமி என்பவருக்கு சொந்தமாக உள்ளது. 4) புல எண்.48/3A ல் மொத்தம் ஏ0.43 செண்ட் (0.17.50 ஏர்ஸ்) நிலம் சீர்காழி பத்திர பதிவு அலுவலகம் பத்திர பதிவு எண்.2497/2014 நாள்.22.08.2014–ன்படி மனுதாரர் திரு C.M ரெங்கநாயகலு, A.புவனேஸ்வரன், ரா.நாராயாணசாமி, என்பவருக்கு சொந்தமானதாக உள்ளது.<br>2) மேற்படி நிலம் பயன்பாடு மாற்றம் கோரும் புல எண் உள்ள நிலம் மனுதாரர்களுக்கு சொந்தமானது எனவும் மேற்படி நிலங்களிடையே புறம்போக்கு நிலங்கள் இல்லை எனவும் நிலம் கையகப்பத்தும் சட்டம் 1894 யை சட்டம் பிரிவு 4(1) ன் கீழ் எந்த துறையாலும் அறிவிப்பு செய்யப்படவில்லை எனவும் நிலம் ஆர்ஜிதம் சம்மந்தமாக நிலம் ஆர்ஜித பட்டியல் எதுவும் பரிசீலனைக்கு பெறப்படவில்லை எனவும், நில சீர்திருத்த சட்டம் 1961–கீழ் நடவடிக்கைகள் ஏதும் நிலுவையில்லை எனவும் நகர்புற உச்சவரம்பு சட்டம் 1978–ன்படி பாதிப்பு இல்லை எனவும், இந்த நிலங்களிலிருந்து இடுகாடு எதுவும் – 100 மீட்டருக்குள் இல்லை எனவும், வெள்ளக்பெருக்கால் உத்தேச மனைப்பிரிவு இடம் பாதிக்கப்படாது உத்தேச மனைப்பிரிவுக்குள் 100 மீட்டருக்கு புகைவண்டி பாதை ஏதும் இல்லை எனவும், இந்த நிலத்திலிருந்து அமைக்கப்படும் பிராதான சாலை தேசிய நெடுஞ்சாலையோடு இணைக்கப்படவில்லை எனவும், மேற்படி புல எண்ணில் அமையும் மனைப்பிரிவுகளில் எந்தவிதமான உயர் மின்அழுத்த கம்பிபாதைகள் எதுவும் இல்லை எனவும், மனைப்பிரிவு அமைப்பதற்கு எந்த தடையுமில்லை என சீர்காழி வட்டாட்சியர் தடையின்மை சான்று வழங்கியுள்ளார். மேலும் பொதுப்பணிதுறை நிர்வாக ஆதாரத்துறை நிலபயன் மாற்றம் செய்திட தடையின்மை சான்று வழங்கப்பட்டுள்ளது.<br>மேற்படி நிலம் பயன்பாடு மாற்றம் கோரும் புல எண்ணில் உள்ள நிலங்கள் மனுதாரர்களுக்கு சொந்தமானது என்பதற்கான நகல்கள் ஆகியன சமர்பித்துள்ளார்கள். மேற்படி புல எண்ணில் பத்திரபதிவு துறை வில்லங்க சான்று சமர்பித்துள்ளார்கள். |

நிலம் பயன்பாடு மாற்றம் கோரும் புல எண்ணில் உள்ள நிலங்களை மனுதாரர்கள் பெயரில் பட்டா மாற்றம் செய்துள்ளதை நிலம் பயன்பாடு மாற்றம் கோரும் புல எண்ணில் உள்ள நிலங்களின் மனுதாரர்கள் மனைப்பிரிவு அமைக்க சட்ட பூர்வமான உரிமை உள்ளவர்கள் என சீர்காழி நகராட்சி நிலை வழக்கறிஞர் தனித்தனியே சட்ட கருத்துறை வழங்கியுள்ளார்.

மனுதாரர்கள் நில பயன்பாடு கோரும் புல எண்களின் நகரளவை பதிவேடு நகல், நகரளவை வரைபடம், சிட்டா அடங்கல் நிலப்பயன் மாற்றம் கோரும் வரைபடம் மற்றும் சுற்றுசார்பு வரைபடம் ஆகியன சமர்பித்துள்ளார்.

மேற்படி நிலப்பயன்பாடு மாற்றம் கோரும் இடம் அங்கீகரிக்கப்பட்ட முழுமை திட்டத்தில் விரிவு அபிவிருத்தி திட்டம் எண்–9 ல் விவசாய பயன்பாடு பகுதியில் அமைகிறது. மேற்படி புல எண்ணிற்கு நகராட்சி மற்றும் நகர் ஊரமைப்பு துறையால் அங்கீகரிக்கப்பட்ட சாய்பாபா கார்டன் நகர் மனைப்பிரிவு 23அடி சாலை அனுகுபாதையாக உள்ளது. நிலபயன்பாடு மாற்றம் கோரும் இடத்தின் கிழக்கில் Ts No : 40/1A1, 4A,6 உள்ளது. மேற்கே ஆண்டிக் பாசனவாய்க்கால் 39,41,47/3 உள்ளது, வடக்கே Ts No : 40/1A2 சாய்பாபா கார்டன் உள்ளது. தெற்கே Ts No : 47/5, 48/1 உள்ளது.

எனவே, நில உபயோக மாற்றம் செய்வது தொடர்பாக தினசரி நாளிதழில் பிரசுரம் செய்ய மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு. மன்றம் அனுமதிக்கலாம்

ந.க.எண்.1290/2018/எப்.1

பொருள் எண்-2

சீர்காழி நகராட்சி – பொது சுகாதாரப்பிரிவில் TN51T-8149 குப்பை அகற்ற பயன் படுத்தப்பட்டு வரும் டிப்பர் லாரி வாட்டர் பம்பு பழுதடைந்து விட்டதால் வாட்டர் பம்பு, ஹைட்ராலிக் ஒஸ், ஏர்ட்ரம் ஒஸ் உதிரிபாகங்கள் புதிதாக பொருத்துவதற்கு விலைப்புள்ளி கோரியதில் 15.02.2019 அன்று கீழ்கண்டவாறு இரண்டு விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

| வ. எண் | விலைப் புள்ளிகள் கொடுத்துள்ள நிறுவனத்தின் பெயர் | கொடுத்துள□ள விலைப்புள□ளி விவரம் |
|---|---|---|
| 1 | திரு.ஆர்.சபரிராஜன்<br>ஸ்ரீ வீரமகாளியம்மன் ஆட்டோ ஒர்க்ஸ்<br>மெயின்ன்ரோடு, தென்பாதி, சீர்காழி. | ரூ.6650 |
| 2 | திரு.எம்.மகேஷ் குமார்<br>எம்.எம்.கே ஆட்டோ சேர்<br>மெயின்ரோடு, சட்டநாதபுரம், சீர்காழி. | ரூ.6400 |

மேற்கண்ட இரண்டு விலைப்புள்ளிகளில் வரிசை எண்.2 ல் குறிப்பிட்டுள்ள சட்டநாதபுரம், மெயின்இராடு என்ற முகவரியை சேர்ந்த எம்.மகேஷ்குமார் கொடுத்துள்ள விலைப்புள்ளி குறைவாக உள்ளதால் அதனை ஏற்பதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு : 1. மன்றம் அனுமதிக்கலாம்.

( ந.க.எண்.35/2019/எச்.1 )

பொருள் எண்-3

பொது சுகாதாரப்பிரிவில் 2019 – 2020 ஆம் ஆண்டில் கீழ் கண்டுள்ள இனங்களுக்கு ஆகும் உத்தேச செலவீனத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண் | செலவீனம் – விவரம் | உத்தேச செலவீனம் தொகை ரூ |
|---|---|---|
| 1 | துப்புரவு பணியாளர்கள், அலுவலக உதவியாளர்கள், ஒட்டுனர்கள், துப்புரவு பணி மேற்பார்வையாளர்களுக்கு பண்டிகை காலங்களில் ஆண்டுக்கு ஒரு முறை வழங்கப்படும் சீருடைகள் மற்றும் தையற்கூலி | ரூ.1.50 இலட்சம் |
| 2 | துப்புரவு பணியாளர்களுக்கு காலணிகள் ( 40 ஜோடிகள் ) | ரூ.50 ஆயிரம் |
| 3 | Reflected Jacket மற்றும் Rain Coat ( 40 எண்ணிக்கை ) | ரூ.1.00 இலட்சம் |
| 4 | துப்புரவு பணியாளர்களுக்கு தேவைப்படும் தளவாட சாமான்கள் | ரூ.2.00 இலட்சம் |
| 5 | பொதுசுகாதார லாரிகளுக்கு அரசுக்கு செலுத்தப்பட | ரூ.2.5 இலட்சம் |

| | | |
|---|---|---|
| | வேண்டிய சாலை வரி, இன்ஈரன்ஸ், பசுமை வரி தகுதி சான்று கட்டணம் உள்ளிட்ட அனைத்து வரிகள் | |
| 6 | தகுதிச்சான்று கட்டணம் பெற ( FC) வாகனத்தில் உள்ள பழுதுகள் சரி செய்தல் | ரூ.2.00 இலட்சம் |
| 7 | பொது சுகாதார லாரி மற்றும் வாகனங்களுக்கு டயர்,டியூப்,பேட்டரி உள்ளிட்ட உதிரி பாகங்கள் பொருத்துதல் | ரூ.1.00 இலட்சம் |
| 8 | பொது சுகாதாரப்பிரிவு வாகனங்களில் பணி நேரத்தில் ஏற்படும் திடீர் பழுதுகளை மராமத்து செய்வதற்கு | ரூ.2.5 இலட்சம் |
| 9 | பிளிச்சீங் பவுடர், நீர்த்த சுண்ணாம்பு, பினாயில் உள்ளிட்டவைகளை அரசு அங்கீகாரம் பெற்ற நிறுவனத்தில் நேரடியாக பெற்றுக்கொள்ளுதல் | ரூ.2.00 இலட்சம் |
| 10 | கொசு ஒழிப்புக்கு தேவைப்படும் பைரத்திரம், பேட்டிசைடு மற்றும் அபேட் மருந்து வாங்குதல் | ரூ.2.50 இலட்சம் |
| 11 | தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் தனிநபர் ழிப்பிடம் குறித்தும் சுகாதார மேம்பாடு குறித்த விழிப்புணர்வு கூட்டங்கள் ஆட்டோ விளம்பரம், பிளக்ஸ், சுவர் விளம்பரம், பிட் நோட்டீஸ், அச்சடித்து வாங்குதல் இபான்ற பணிகள் இமற்கொள்ளுதல் | ரூ.1.00 இலட்சம் |
| 12 | டெங்கு காய்ச்சல் குறித்து ஆட்டோ மூலம் விளம்பரம் செய்தல் பிளக்ஸ் போர்டு அடித்தல் பிட் நோட்டீஸ் அச்சடித்து வழங்குதல் போன்ற பணிகள் மேற்கொள்ளுதல் | ரூ.50 ஆயிரம் |
| 13 | கலவை உரங்கிடங்கில் உள்ள குப்பைகளை அவ்வப்போது JCB மற்றும் புள்இடாசர் மூலம் சமன் செய்தல் | ரூ.1.50 இலட்சம் |
| 14 | நகராட்சி பொது கழிப்பிடங்கள், செப்டிக்டேங், லாரி மூலம் சுத்தம் செய்தல் | ரூ.50 ஆயிரம் |
| 15 | கழிவு நீர்மற்றும் மழைநீர் செல்லும் பாலத்தினம் அடைப்புகளை சரி செய்திட Air Compresser லாரி மூலம் சுத்தம் செய்திடல் | ரூ.20 ஆயிரம் |
| 16 | மழைநீர் செல்லும் வாயக்கால், பாலங்கள் உள்ள அடைப்புகளை JCB மூலம் அப்புறப்படுத்துதல் | ரூ.1.00 இலட்சம் |
| 17 | Fogging Machine பழுது நீக்கம் செய்தல் | ரூ. 25 ஆயிரம் |
| 18 | பிளாஸ்டிக் ஒழிப்பு குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்துதல் | ரூ.50 ஆயிரம் |

மேற்கண்ட இனங்களுக்கு நடவடிக்கை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு : **1. மன்றம் அனுமதிக்கலாம்.**

**( ந.க.எண்.579/2019/எச்.1)**

| | |
|---|---|
| பொருள் எண்-4 | சீர்காழி வட்டம் – எடமணல் கிராமத்தில் அமைந்துள்ள நகராட்சிக்கு சொந்தமான கலவை உரத்திடலில் பாதுகாவல் பணி மற்றும் சீர்காழி ஈசானிய தெரு கலவை உரத்திடலில் ஒரு பகல் நேர காவலர் மற்றும் ஒரு இரவு நேர காவலர் பணியினை மேற்கொள்ள ஒப்பந்த அடிப்படையில் மனித சக்தியை பெற்று பாதுகாவல் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது ஒப்பந்த காலம் **31.03.2019** வுடன் முடிவடைகிறது. எனவே தொடர்ந்து **2019 – 2020** ஆம் ஆண்டு பாதுகாவல் பணியினை மேற்கொள்ள ஒப்பந்தபுள்ளி கோரி நடவடிக்கை மேற்கொள்ளும் அதற்காகும் தோராய செலவீனம் ரூ.**430000/ –**ஐ பொது நிதியில் இருந்து செலவுகள் செய்து மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. |

அலுவலக குறிப்பு : **1.** மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.143/2019/எச்.1)

**பொருள் எண்-5**

சீர்காழி நகராட்சி – கணினி பதிவு செய்யும் பணி – கணினியில் புதிய கணக்கீட்டு முறை பதிவு, பிறப்பு – இறப்பு பதிவு செய்தல் , நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் தஞ்சாவூர் அவர்களிடமிருந்தும், மாவட்ட ஆட்சியர் நாகப்பட்டினம் அவர்களிடமிருந்தும் வரும் கடிதங்கள் மற்றும் மின்னஞ்சல்கள் ஆகியவற்றிற்கு உடனடியாக பதில் தர வேண்டியுள்ளது. மேற்படி பணிகள் உடனுக்குடன் தாமதமின்றி செய்வதற்கு கணினி தெரிந்த இரண்டு நபர்களை முற்றிலும் தற்காலிமாக ( தினக்கூலி அடிப்படையில் ) மாவட்ட ஆட்சியர் நாகப்பட்டினம் அவர்களின் செயல்முறைகளின் 2018 – 2019 ஆம் ஆண்டின் விலை விகிதப்படி 01.04.2019 முதல் 31.03.2020 வரை ஓர் ஆண்டிற்கு நியமனம் செய்து கொள்வதற்கும் அதற்காகும் தோராய செலவீனம் ரூ.3,00,000 /– ஐ பொது நிதியிலிருந்து மேற்கொள்வதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு : **1.** மன்றம் அனுமதிக்கலாம்.

**2.** அவசர அவசியம் கருதி நகர்மன்றத்தின் ஒப்புதலை எதிர்நோக்கி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தபுள்ளி கோரி மேற்கொள்வதற்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

( ந.க.எண்.141/2019/எச்.1 )

**பொருள் எண்-6**

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் சித்தமல்லி தலைமை நீரேற்று நிலையத்திலிருந்து விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேற்படி மோட்டரை இயக்க இந்நகராட்சியில் போதுமான பணியாளர்கள் இல்லாததால் நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் வழிகாட்டி நெறிமுறையில் ஒப்பந்த அடிப்படையில் Out Source முறையில் பணியாளர்களை அமர்த்தி மேற்கொள்ள Lr,No.539/2005/F.3 நாள்,28.1.2005–ல் அனுமதிக்கப்பட்டுள்ளத ன்படி பொதுப்பணிதுறை விலை விகித்தின்படி Electrician Grade-II நிலையில் ஒப்பந்தப்புள்ளி மூலம் பணியாளர்களுக்கு 31.03.2019 அனுமதித்துள்ள நாள் முடிவடையும் நிலையில். தற்சமையம் எதிர் வரும் பாராளுமன்ற தேர்தல் விதி முறையால் ஒப்பந்தப்புள்ளி கோர கால அவகாசம் இல்லாததால் 01.04.2019 முதல் 30.06.2019 வரை தற்போது உள்ள ஒப்பந்தப்புள்ளி படி பொதுப்பணித் துறை விலை விகிதத்தில் ஒரு நபருக்கு நாள் ஒன்றுக்கு ரூ.425.00 வீதம் மூன்று நபர்கள் கொண்டு பணி மேற்கொள்ள ஆகும் செலவினம் ரூ.1,12,200/– ஐ மேலும் 3 மாதங்களுக்கு காலநீட்டிப்பு செய்து இந்நகராட்சியின் குடிநீர் திட்ட நிதியிலிருந்து தொகை வழங்கிட மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண்-7**

இந்நகராட்சியின் 2018 – 2019 ஆம் ஆண்டிற்கான அலுவலகத்தில் உள்ள கணினி, பிரிண்டர் மற்றும் இதர ஸ்கேனர் பழுதடைந்ததை பழுது நீக்குவதற்கு மற்றும் டோனர் ரீபில்லிங் செய்தவதற்கும் கூடுதலாக உத்தேச செலவினம் ரூ.15000/ ஐ நகராட்சி பொது நிதியில் பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு : **1.** மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண்-8**

சீர்காழி நகராட்சி – இந்நகராட்சியில் 2017–18 ஆம் ஆண்டில் நடைபெற்ற பல்வேறு திட்டங்களின் கீழ் செய்யப்பட்ட பணிகளின் விவரத்தினை மாலை மலர் நாளிதழில் விளம்பரம் செய்யப்பட்டுள்ளது அதற்கான பட்டியல் தொகை கீழ் கண்டவாறு வரப்பெற்றுள்ளது.

| வ.எண் | தேதி | தினசரி நாளிதழ் பெயர் | தொகை |
|---|---|---|---|
| **1** | **03.11.2018** | **மாலை மலர்** | **16,800.00** |
| | | **கூடுதல்** | **16,800.00** |

மேற்படி நாளிதழுக்கு விளம்பரம் செய்யப்பட்டதற்கான பட்டியல் தொகை ரூ.16,800.00 ஐ நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்கிட மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

| | |
|---|---|
| | மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்-3471/2018/இ1) |
| பொருள் எண்-9 | சீர்காழி நகராட்சியின் 2019–2020–ம் ஆண்டிற்கான வரவு செலவு அறிக்கையினை (General Budget) கனிணியில் இணையதளம் மூலம் பதிவேற்றம் செய்யவும், பதிவேற்றம் செய்யப்பட்ட பின்பு அறிக்கை தயார் செய்யவும், அதற்கான மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு :<br>மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>(ந.க.எண்-713/2019/பி.1) |

(ஒம்) . திரு.மு.அஜிதாபர்வின்.B.sc.,
தனி அலுவலர் மற்றும் ஆணையர்
சீர்காழி நகராட்சி.

இடம்–சீர்காழி
நாள்–07.03.2019

/உண்மை நகல்/

ஆணையர்
சீர்காழி நகராட்சி.